

வெளி மாநிலங்களில் இருந்து தமிழகம் வருவோருக்கு 'இ–பாஸ்' கட்டாயம்

சென்னை, மார்ச் 8–

ஆந்திரம், கர்நாடகம் மற்றும் புதுச்சேரி தவிர்த்து மற்ற வெளிமாநிலங்கள் மற்றும் வெளிநாடுகளில் இருந்து தமிழகம் வருபவர்கள் கட்டாயம் 'இ–பாஸ்' எடுக்க வேண்டும் என தமிழக அரசு அறிவித்துள்ளது. கொரோனா பரவல் அதிகரிப்பதை தொடர்ந்து தமிழக அரசு இந்த நடவடிக்கையை மேற்கொண்டுள்ளது.

உலகம் முழுவதும் கொரோனா பெருந்தொற்று அச்சுறுத்தல் ஒரு ஆண்டுக்கும் மேலாக நீடித்து வருகிறது.

இந்தியாவில் கொரோனா பரவல் காரணமாக, கடந்த ஆண்டு மார்ச் 25–ந் தேதி முதல் நாடு முழுவதும் ஊரடங்கு அமல்படுத்தப்பட்டது. தற்போது, அமலில் இருக்கும் 14–வது கட்ட ஊரடங்கு இம்மாதம் 31–ந் தேதி வரை நீடிக்கிறது.

ஊரடங்கு நடைமுறை தொடங்கியபோதே, பொதுமக்கள் போக்குவரத்தை குறைக்கும் நடவடிக்கையாக 'இ–பாஸ்' நடைமுறை அமல்படுத்தப்பட்டது. அதன் பின்னர் தொற்று குறைந்ததால் கடந்த ஆண்டு செப்டம்பர் மாதம் முதல் 'இ–பாஸ்' நடைமுறை ரத்து செய்யப்பட்டது.

இந்த நிலையில், கடந்த 3 நாட்களாக தமிழகத்தில் கொரோனா பரவலின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. இதனால், தமிழகத்தில் மீண்டும் 'இ–பாஸ்' நடைமுறை கொண்டு வரப்பட்டுள்ளது.

ஏற்கனவே, இந்தியாவுக்குள் வெளிநாடுகளில் இருந்து வரும் பயணிகளுக்கு, மத்திய சுகாதாரம் மற்றும் குடும்பநலத்துறை வழிகாட்டு நெறிமுறைகளை அறிவித்துள்ளது.

அந்த அறிவிப்பின் அடிப்படையில் கடந்த மாதம் (பிப்ரவரி) 24–ந் தேதி தமிழக அரசு வெளிநாடுகளில் இருந்து வரும் பயணிகள் கடைபிடிக்க வேண்டிய வழிமுறைகளை அரசாணையாக வெளியிட்டது.

இந்த அரசாணையுடன் இணைந்து கூடுதல் வழிமுறைகள் கொண்டு புதிய அரசாணையை தமிழக சுகாதாரத்துறை செயலாளர் டாக்டர் ஜெ.ராதாகிருஷ்ணன் தற்போது வெளியிட்டுள்ளார். அதன் விவரம் வருமாறு:–

வெளிமாநிலங்களில் இருந்து தமிழகத்துக்கு வர்த்தக ரீதியாக, 72 மணி நேரம் (3 நாட்கள்) தங்கும் வகையில் வரும் பயணிகளுக்கு வீட்டு கண்காணிப்பு விதிகளில் இருந்து விலக்கு அளிக்கப்படுகிறது. மேலும் வெளிநாடு மற்றும் வெளிமாநிலங்களில் இருந்து (கர்நாடகா, ஆந்திரா, புதுச்சேரி தவிர்த்து) வரும் பயணிகள் கட்டாயம் 'இ–பாஸ்' நடைமுறையை பின்பற்ற வேண்டும்.

இங்கிலாந்து, தென் ஆப்பிரிக்கா, பிரேசில் ஆகிய நாடுகளில் இருந்து வேறு மாநில விமான நிலையம் வழியாக தமிழகம் வரும் பயணிகள், அந்த விமான நிலையத்தில் கொரோனா பாதிப்பு இல்லை என்றால் பரிசோதனைக்கு, ரத்தம் மற்றும் சளி மாதிரிகள் கொடுத்துவிட்டு புறப்பட்டு செல்லலாம். அவர்களது பரிசோதனை முடிவுகள் அடிப்படையில் பொது சுகாதாரத்துறை இயக்குனர் மற்ற நடவடிக்கைகள் மேற்கொள்வார்.

ஐரோப்பா மற்றும் மத்திய கிழக்கு நாடுகளில் இருந்து வரும் பயணிகள் (இங்கிலாந்து, பிரேசில், தென் ஆப்ரிக்கா தவிர்த்து) www.newdelhiairport.in என்ற இணையதளத்தில் கொரோனாவுக்கான சுய உறுதிமொழியை பயண தேதிக்கு 14 நாட்களுக்கு முன்னர் சமர்ப்பிக்கவேண்டும்.

மேலும் பயண தேதிக்கு 72 மணி நேரத்துக்குள் எடுக்கப்பட்ட ஆர்.டி.பி.சி.ஆர். பரிசோதனையில் பாதிப்பு இல்லை என்ற பரிசோதனை முடிவை கையில் கொண்டு வரவேண்டும். இந்த முடிவை மேற்கண்ட இணையதளத்தில் சமர்ப்பிக்கவும் வேண்டும்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

துப்பாக்கி சுடும் போட்டி: நடிகர் அஜித் அணி தங்கம், வெள்ளி பதக்கம் வென்றனர்

சென்னை, மார்ச். 8–

தமிழ்நாடு மாநில துப்பாக்கி சுடுதல் சாம்பின்ஷிப் போட்டியில் நடிகர் அஜித் அணியினர் 6 தங்கம், வெள்ளி பதக்கங்களை வென்றுள்ளனர்.

நடிகர் அஜித் தற்போது 'வலிமை' படப்பிடிப்பில் கவனம் செலுத்தி வருகிறார். படப்பிடிப்புக்கு இடையே கார், பைக் பந்தயங்களிலும் கவனம் செலுத்தி வருகிறார். சமீபகாலமாக துப்பாக்கி சுடும் போட்டியில் அதிக ஆர்வம் செலுத்திவந்தார்.

இந்நிலையில், தமிழ்நாடு மாநில துப்பாக்கி சுடுதல் 46வது சாம்பியன்ஷிப் போட்டி சென்னையில் 2ந் தேதி துவங்கியது. இதில் தமிழகம் முழுவதிலுமிருந்து 900 பேர் பங்கேற்றனர். சென்னை ரைபிள் கிளப் அணியில் அஜித் இடம்பெற்றிருந்தார். தொடர்ந்து 6 நாட்கள் நடைபெற்ற இப்போட்டி நேற்று நிறைவடைந்தது.

இதில் அஜித் அணியை சேர்ந்தவர்கள் ஏர் பிஸ்டல் (10 மீ) பிரிவு, சென்டர் பயர் பிஸ்டல்.32/ என்.ஆர் 25 மீ. பிரிவு, ஸ்டாண்டர்டு பிஸ்டல்.22/ ஐஎஸ்எஸ்எப் 22 மீ பிரிவு, ப்ரீ பிஸ்டல் 22 (50 மீ) பிரிவுகளில் தங்கப் பதக்கம், சென்டர் பயர் பிஸ்டல் 32 ஐஎஸ்எஸ்எப் 25 மீ. பிரிவு, ஸ்டாண்டர்டு பிஸ்டல் 22/ என்.ஆர். (25 மீ) பிரிவு அணியினர் வெள்ளிப் பதக்கம் என மொத்தம் 6 பதக்கங்களை வென்றுள்ளனர்.

கொரோனா தடுப்பூசி போட்டு எம்ஜிஆர் இளைஞர் அணி செயலாளர் ஆர்வி ரஞ்சித்குமார் விழிப்புணர்வு

காஞ்சீபுரம்,மார்ச் 8–

எதிர்வரும் காலங்களில் கொரோனா தாக்கத்திலிருந்து தப்பிக்க 45 வயதிற்கு மேற்பட்டவர்கள் கட்டாயம் தடுப்பூசி போட்டுக் கொள்வதன் அவசியம் குறித்து இன்று காஞ்சீபுரம் மாவட்ட எம்.ஜி.ஆர் இளைஞர் அணி செயலாளர் முத்தியால்பேட்டை ஆர்.வி. ரஞ்சித்குமார் போரூர் ராமச்சந்திரா மருத்துவமனையில் கோவிட் ஷீல்டு தடுப்பூசி போட்டுக் கொண்டு விழிப்புணர்வு ஏற்படுத்தினார்.

பிறகு அவர் பேசுகையில், தமிழகத்தில் கொரோனா மீண்டும் அதிகரித்து வருவதால் மத்திய–மாநில அரசு இணைந்து மக்கள் நலன் கருதி இந்தியா முழுவதும் கொரோனா தடுப்பு ஊசி மக்களுக்கு இலவசமாக வழங்கி வருகிறது. அதற்கான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் தீவிரம் அடைந்து வருகிறது. தமிழக முதலமைச்சர், துணை முதலமைச்சர், அமைச்சர்கள், அதிகாரிகள் என அனைவரும் கொரோனா தடுப்பூசி போட்டுக் கொண்டு விழிப்புணர்வு ஏற்படுத்தி வருகின்றனர். கொரோனா நோய் எதிர்ப்பு சக்தி கொண்ட கோவிட் ஷீல்டு தடுப்பூசியினை தமிழ்நாட்டில் அனைத்து அரசு மருத்துவமனைகளில் இலவசமாகவும், தனியார் மருத்துவ மனைகளில் ரூ.250க்கும் மக்களுக்கு செலுத்தப்பட்டு வருகிறது. எனவே எதிர்வரும் காலங்களில் நோய்த் தாக்கத்தில் இருந்து விடுபட 45 வயதிற்கு மேற்பட்ட அனைவரும் கொரோனா தடுப்பூசி போட்டுக் கொள்வது அவசியமாகிறது. இந்தியாவிலேயே தமிழகத்தில்தான் அதிக அரசு மற்றும் தனியார் மருத்துவ மனையில் கொரோனா தடுப்பூசி முகாம் அமைக்கப்பட்டு மக்களுக்கு தடுப்பூசி செலுத்தப்பட்டு வருகிறது என்றார்.

கொரோனா வைரசுக்கு எதிரான போரில்

உலகத்தை மீட்ட இந்திய தடுப்பூசிகள்: அமெரிக்க விஞ்ஞானி பாராட்டு

ஹூஸ்டன், மார்ச்.8

தடுப்பூசி மூலம் கொரோனாவில் இருந்து உலகத்தை இந்தியா மீட்டுள்ளது என்று அமெரிக்க விஞ்ஞானி பாராட்டி உள்ளார்.

கொரோனாவுக்கு எதிரான போராட்டத்தை வெற்றிகரமாக நடத்தி வருகிற இந்தியா, கோவிஷீல்டு, கோவேக்சின் ஆகிய 2 தடுப்பூசிகளை தயாரித்து வருகிறது. இவ்விரு தடுப்பூசிகளின் அவசரகால பயன்பாட்டு ஒப்புதலை வழங்கி, உள்நாட்டில் உபயோகத்துக்கு கொண்டு வந்ததுடன், உலகின் பல நாடுகளுக்கும் இந்தியா ஏற்றுமதி செய்து வருகிறது. இந்திய தடுப்பூசிகளைப் பெறுவதற்காக உலகின் பல நாடுகளும் காத்திருக்கின்றன.

இந்த நிலையில் அமெரிக்காவின் முன்னணி விஞ்ஞானிகளில் ஒருவரும், பேய்லர் மருத்துவ கல்லூரியின் தேசிய வெப்ப மண்டல மருத்துவ நிறுவனத்தின் டீனுமான டாக்டர் பீட்டர் ஹோடெஸ், காணொலி காட்சி வழியாக நடந்த ஒரு கருத்தரங்கில் பேசினார்.

அப்போது அவர் கூறியதாவது:

அமெரிக்கா உருவாக்கியுள்ள இரு எம்.ஆர்.என்.ஏ. தடுப்பூசிகள், உலகின் குறைந்த மற்றும் நடுத்தர வருமான நாடுகளில் தாக்கத்தை ஏற்படுத்தாது. ஆனால், பி.சி.எம்., ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழகம் போன்ற உலகளாவிய பல்கலைக்கழகங்களுடன் சேர்ந்து உருவாக்கப்பட்டுள்ள இந்திய தடுப்பூசிகள், உலகத்தை கொரோனாவில் இருந்து மீட்டிருக்கின்றன. அந்த வகையில், இந்தியாவின் பங்களிப்பை குறைத்து மதிப்பிட முடியாது.

கொரோனா வைரசுக்கு எதிரான போரில், உலகிற்கு இந்தியாவின் பரிசுதான் தடுப்பூசிகள் ஆகும்.

இந்தியாவிடம் ஏதோ ஒரு சிறப்பு இருக்கிறது. அதை நானே பார்க்கிறேன். நான் இந்தியாவில் உள்ள எனது சகாக்களுடன் வாரம்தோறும் காணொலி காட்சி வழியாக உரையாடுகிறேன். ஒரு பரிந்துரையைச் செய்தால், அதை சில நாட்களில் செய்து முடித்து விடுகிறார்கள். பெயருக்கு அல்ல சிறப்பாகவே அதுவும் நம்ப முடியாத வகையில் சிந்தனையுடனும், படைப்பாற்றலுடனும் செய்கிறார்கள்.

இவ்வாறு அவர் கூறினார்.

புவி கண்காணிப்பு, பேரிடர் மீட்பு பணிகளுக்காக

இஸ்ரோவின் ஜிஐசாட்–1 செயற்கைகோள்: இம்மாத இறுதியில் விண்ணில் பாய்கிறது

ஸ்ரீஹரிகோட்டா, மார்ச் 8–

ஜிஎஸ்எல்வி எப்–10 ராக்கெட் மூலம் ஜிஐசாட்–1 செயற்கைக் கோள் இம்மாத இறுதியில் விண்ணில் செலுத்தப்பட உள்ளது.

புவி கண்காணிப்பு, பேரிடர் மீட்பு பணிகளுக்காக ஜிஐசாட்–1 என்ற அதிநவீன 'ஜியோ இமேஜிங்' செயற்கை கோளை இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனம் தயாரித்தது. இதை ஸ்ரீஹரிகோட்டாவில் இருந்து ஜிஎஸ்எல்வி எப்–10 ராக்கெட்மூலம் கடந்த 2020 மார்ச் 5ம் தேதிவிண்ணில் செலுத்த இஸ்ரோதிட்டமிட்டது. தொழில்நுட்பக் காரணங்களால் ராக்கெட் பயணம் நிறுத்தப்பட்டு, தேதி குறிப்பிடாமல் தள்ளிவைக்கப்பட்டது.

இந்நிலையில், ஜிஐசாட்–1 செயற்கைக்கோளை ஜிஎஸ்எல்வி எப்–10 ராக்கெட் மூலம் இம்மாத இறுதியில் விண்ணில் செலுத்த இஸ்ரோ முடிவு செய்துள்ளது.

இதற்கான ஆயத்தப் பணிகளில் விஞ்ஞானிகள் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர். செயற்கைக் கோள் வடிவமைப்பு, செயல்பாடுகளில் சில தொழில்நுட்ப அம்சங்கள் மாற்றி அமைக்கப்பட்டு உள்ளதாகவும் தெரிகிறது.

2,268 கிலோ எடை கொண்டது ஜிஐசாட்–1. இதில் உள்ள 5 விதமான 3டி கேமராக்கள், தொலைநோக்கி மூலம் புவிப்பரப்பை துல்லியமாக பார்க்கவும், படம் எடுக்கவும் முடியும்.

மகாராஷ்டிர சட்டசபை ஊழியர்கள் 36 பேருக்கு கொரோனா பாதிப்பு

மும்பை, மார்ச் 8–

மகாராஷ்டிரசட்டசபை ஊழியர்கள், எம்.எல்.ஏக்களுக்கு கொரோனா பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது.

மகாராஷ்டிர சட்டசபை இன்று கூடுகிறது. இதையொட்டி கடந்த 2 நாட்களாக சட்ட சபை ஊழியர்கள் மற்றும் எம்.எல். ஏக்களுக்கு கொரோனா பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது. மொத்தம் 2,746 பேரின் கொரோனா மாதிரிகள் பரிசோதிக்கப்பட்டது.

இதில், 36 பேருக்கு தொற்று பாதிப்பு இருப்பது உறுதி செய்யப்பட்டுள்ளது. அதேபோல், கடந்த வாரமும் 3,900 பேருக்கு கொரோனா பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு இருந்தது. இதில் 46 பேருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டு இருந்தது.

மகாராஷ்டிர சட்டசபையில் இன்று பட்ஜெட் தாக்கல் செய்யப்பட உள்ளது. துணை முதல்வர் அஜித் பவார் பட்ஜெட்டை தாக்கல் செய்ய உள்ளார். மகாராஷ்டிராவில் கடந்த சில நாட்களாக கொரோனா தொற்று அதிகரித்து வருகிறது.

தற்போது நிலவரப்படி மகாராஷ்டிராவில் கடந்த 24 மணி நேரத்தில் 11,141 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். அங்கு மொத்தம் 22 லட்சத்து 19 ஆயிரத்து 727 பேர் இதுவரை கொரோனாவால் பாதிக்கப்பட்டுள்ளனர். அங்கு மொத்தம் 20 லட்சத்து 68 ஆயிரத்து 44 பேர் குணமடைந்துள்ளனர். 52 ஆயிரத்து 478 பேர் கொரோனாவிற்கு பலியாகி உள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

உலக மகளிர் தினத்தையொட்டி, தமிழ் வளர்ச்சித்துறை சார்பில் சென்னை, காமராஜர் சாலையில் அமைந்துள்ள தமிழ் மூதாட்டி ஔவையார் திருவுருவச் சிலைக்கு அருகில் வைக்கப்பட்டுள்ள திருவுருவப்படத்திற்கு தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அரசு செயலாளர் மகேசன் காசிராஜன், தமிழ் வளர்ச்சித் துறை இயக்குநர் கோ. விசயராகவன் ஆகியோர் மலர் தூவி மரியாதை செலுத்தினர்.

PUBLIC NOTICE

NOTICE is hereby given that the below mentioned Sub Broker/ Authorised Person is no longer affiliated as Sub Broker/ Authorised Person of Kotak Securities Limited.

Sub Broker/ Authorised Person Name	Trade Name	Exchange Registration Numbers of Sub Broker/ Authorised Person	Address of Sub Broker/ Authorised Person
SWATHI CHOUDHARY	SWATHI CHOUDHARY	NSE - AP0291081231 BSE - AP0106730106955	C/3 Siddharth Palace 9/12 Vepery Church Road Vepery Chennai 600007

Please note that above mention Sub Broker (SB)/Authorised Person (AP) is no longer associated with us. Any person henceforth dealing with above mention SB/AP should do so, at their own risk. Kotak Securities Ltd. shall not be liable for any such dealing. In case of any queries for the transactions till date, Investors are requested to inform Kotak Securities Ltd. within 15 days from the date of this notification, failing which it shall be deemed that there exists no queries against the above mentioned SB/AP.

Kotak Securities Limited. Registered Office: 27 BKC, C 27, G Block, Bandra Kurla Complex, Bandra (E), Mumbai 400051. CIN: U99999MH1994PLC134051, Telephone No.: +22 43360000, Fax No.: +22 67132430, Website: www.kotak.com / www.kotaksecurities.com. Correspondence Address: Infinity IT Park, Bldg. No 21, Opp. Film City Road, A K Vaidya Marg, Malad (East), Mumbai 400097. Telephone No: 42856825. SEBI Registration No: INZ000200137 (Member of BSE, NSE, MSE, MCX & NCDEX), AMFI ARN 0164, PMS INP000000258, and Research Analyst INH000000586. NSDL/CDSL: IN-DP-NSDL-23-97.

சென்னை உயர்நீதிமன்றம்
(உயில் மற்றும் உயில் இல்லாத வழக்கு பற்றிய ஆள்வரை)
முதலேற்பு மனு எண். 108/2020

இந்திய வாரிசுரிமைச் சட்டம் 39/1925
தொடர்பான மனுவில் 08.10.2003 அன்று
இறந்து போன T.V.துரைபாண்டி நாடார்
அவர்களின் உயில் சாசனம் தொடர்பான மனு.

திரு.டி.வி.டி. பார்த்திபன்.த/பெ.T.V.துரைபாண்டி நாடார்
பழைய நெ.15, புதிய நெ.35, ஸ்ரீரங்கம்மாள் தெரு,
பழைய வண்ணாரப்பேட்டை, சென்னை – 600 021 ... மனுதாரர்

எதிர்

1) திரு. டி.வி.டி. பிரகஸ்பதி, த/பெ. (லேட்) T.V.துரைபாண்டி நாடார்
ப.நெ.153, பு.நெ.26 சஞ்சீவராயன் கோயில் தெரு,
பழைய வண்ணாரப்பேட்டை, சென்னை – 600 021
2) திருமதி. ஆர். பத்மாவதி, க/பெ. டி.ரத்னவேல் (லேட்)
த/பெ. (லேட்) T.V.துரைபாண்டி நாடார்,
நெ.97/102, இளைய முதலி தெரு,
கொருக்குப்பேட்டை, சென்னை – 600 021
3) திருமதி. ஆர்.என். பிரபாவதி, க/பெ. ஆர்.நாகராஜ்,
த/பெ. (லேட்) T.V.துரைபாண்டி நாடார்,
நெ.40/52, தாண்டவராய தெரு,
பழைய வண்ணாரப்பேட்டை, சென்னை – 600 021
4) திருமதி. யு.பரமேஸ்வரி, க/பெ. என். உலகநாதன்
நெ.78/83, சேனியம்மன் கோயில் தெரு,
தண்டையார் பேட்டை, சென்னை – 600 081
5) திருமதி. என். ஜான்சிராணி, க/பெ. டி.வி.டி. பார்த்திபன்
பழைய நெ.15, புதிய நெ.35, ஸ்ரீரங்கம்மாள் தெரு,
பழைய வண்ணாரப்பேட்டை, சென்னை – 600 021
6)திரு. பி.பிரதீப், த/பெ. டி.வி.டி. பார்த்திபன்,
பழைய நெ.15, புதிய நெ.35, ஸ்ரீரங்கம்மாள் தெரு,
பழைய வண்ணாரப்பேட்டை, சென்னை – 600 021
7) திரு. பி. ஜகந்நாதன், த/பெ. டி.வி.டி. பார்த்திபன்,
பழைய நெ.15, புதிய நெ.35, ஸ்ரீரங்கம்மாள் தெரு,
பழைய வண்ணாரப்பேட்டை, சென்னை – 600 021
8) திரு. பி.பிரதாப், த/பெ. டி.வி.டி. பார்த்திபன்,
பழைய நெ.15, புதிய நெ.35, ஸ்ரீரங்கம்மாள் தெரு,
பழைய வண்ணாரப்பேட்டை, சென்னை – 600 021 – எதிர்மனுதாரர்கள்

பழைய நெ.15, புதிய நெ.35, ஸ்ரீரங்கம்மாள் கோயில் தெரு, பழைய வண்ணாரப்பேட்டை, சென்னை – 600 021 என்ற இடத்தில் வசித்து வந்த08.10.2003 அன்று இறந்து போன T.V.துரைபாண்டி நாடார் அவர்களின் சொத்துக்கள் தொடர்பான மனு சென்னை உயர்நீதிமன்றம் மாஸ்டர் கோர்ட்டில் 20.04.2021 அன்று காலை 10.30 மணிக்கு விசாரணைக்கு வருகிறது. மேற்படியாரின் உயில் சொத்துக்களில் ஏதேனும் பாத்தியதை கோருகிற அனைவரும் தங்களுக்கு தக்கதெனக் கருதினால் நீதிமன்றம் நிர்வாகச் சான்றிதழ் வழங்கப்படுவதற்கு முன்பு jroriginalsidemhc@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரியில் தங்களது ஆட்சேபணைகளைத் தெரிவித்துக் கொள்ளுமாறு இதன் மூலம் அறிவிக்கப்படுகிறார்கள்.

2021ம் ஆண்டு மார்ச் மாதம் 5ம் தேதி சென்னையில்
கையொப்பமிடப்பட்டது.

ஜெயேந்திர கிருஷ்ணன்
மனுதாரரின் வழக்கறிஞர்
எண்.132, கூடுதல் சட்ட அறைகள்
உயர்நீதிமன்றம்
சென்னை– 600 104

பொ. சாந்தினி ஜேஸ்மின்
உதவி பதிவாளர்
முதலேற்பு பிரிவு–1
உயர்நீதிமன்றம்
சென்னை–600 104.

AMOL
HEALTH RESOURCE CENTRE
A Program Run by Anirudha Foundation
(Regn. No.250/14)

TAPING WORKSHOP

14.3.2021 (Sunday) 10:00 am to 2:00 pm
(Refreshments will be provided)

Aims of Taping...
- Stabilize or support an injury
- Relieve pain by de-loading vulnerable or painful structures
- Facilitate normal movement, muscle action, or postural patterns.

Best for...
- Physio
- Medical Enthusiast
- Nurses
- Physical Trainers
- Gym Trainers

Who Need...
- Hairline Fracture
- Ligament Injury
- Muscle Sprain
- Re-arraning Anatomical Position
- Dislocation

Registration Fees Rs.1499/-

Call for Registration
+91 90940 44422

WORKSHOP PERKS
Certificate, Scribbling Pad, 1 Taping Roll

Resource Person
Dr. P. Uma Maheswari
Doctorate in Physiotherapy
(Certified & Experienced Pioneer Over Two Decades - Manual Therapy and Medical Fitness)

Venue No.55, Chowdry Nagar Main Road, Valasaravakkam
Chennai - 600 087. www.amol.co

பொது அறிவிப்பு

திருவள்ளூர் மாவட்டம், வீராபுரம், மோரை கிராமம், சர்வே எண் 276/1, அன்னை மரியா இரண்டாவது அவின்யூ, 2475 சதுர அடி பரப்பளவு கொண்ட மனை எண் 11, சொத்து தொடர்பான பூந்தமல்லி சார் பதிவாளர் அலுவலகத்தில், பதிவு செய்யப்பட்ட, 9.12.1991 தேதியிட்ட, கிரய பத்திர ஆவண எண் 6612/1991 கொண்ட அசல் கிரய பத்திரத்தை, எனது கட்சிக்காரர் திரு. M.V.வெங்கடாச்சலம் என்பவர் 24.12.2020 அன்று சென்னையில் தொலைந்து போனதாக அறிவிக்கின்றார்.

யாராவது அதைக் கண்டுபிடித்து வைத்திருந்தால், அவ்வாறு கூறி, மேலே குறிப்பிடப்பட்டுள்ள ஆவணத்தை, அடுக்குமாடி குடியிருப்பு எண் A2, முதல் மாடி, ஆனந்தி பிளாட்ஸ், கதவு எண் 27/16, திருவள்ளுவர் கோயில் தெரு, மைலாப்பூர், சென்னை – 600 004 –ல் வசிக்கும் திரு. M.V.வெங்கடாச்சலம் ஆகிய எனது கட்சிக்காரரிடம் இந்த பொது அறிவிப்பு வெளியிடப்பட்ட நாளிலிருந்து ஒரு வாரக்கிற்குள் ஒப்படைக்குமாறு கோரப்படுகிறார்கள். இல்லையென்றால், மேற்கூறிய ஆவணம் மீளமுடியாமல் தொலைந்துவிட்டது என்று கருதப்படும்.

S.புகழேந்தி
அட்வகேட் & நோட்டரி,
1, மல்லீஸ்வரர் கோயில் தெரு,
மயிலாப்பூர், சென்னை–600 004.

அபான் ஆப்ஷோர் லிமிடெட்

aban

பதிவு அலுவலகம்: "ஜனப்ரியா கிரஸ்ட்", 113, பாந்தியன் சாலை, எழும்பூர், சென்னை–600 008.
Website: www.abanoffshore.com; Tel No.044-49060606; Fax:044-28195527 CIN:L01119TN1986PLC013473

பொது அறிவிப்பு

கம்பெனி பங்குதாரர்களின் அசாதாரண பொதுக்கூட்டம் ("EGM") திங்கட்கிழமை, 29 மார்ச் 2021 அன்று இந்திய நேரப்படி காலை 10.15 மணிக்கு காணொளி காட்சி ("VC")/பிற ஒளி ஒலி சாதனங்கள் ("OAVM") மூலமாக நடைபெறுகிறது என்று இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

உலகளாவிய COVID–19 தொற்றுநோயால் எழும் நிலைமையைக் கருத்தில் கொண்டு, கார்ப்பரேட் விவகாரங்கள் துறை அமைச்சகத்தினால் வழங்கப்பட்ட (எம்சிஏ) ஏப்ரல் 8, 2020 தேதியிட்ட சுற்றறிக்கை எண் 14/2020, ஏப்ரல் 13, 2020 தேதியிட்ட சுற்றறிக்கை எண் 17/2020, மே 05,2020 தேதியிட்ட சுற்றறிக்கை எண் 20/2020 மற்றும் 12 மே 2020 தேதியிட்ட செபி சுற்றறிக்கை குறிப்பு எண் SEBI/HO/CFD/CMD1/CIR/P/2020/79னால் வெளியிடப்பட்ட வழிகாட்டுதல்களின் கம்பெனியின் அசாதாரண பொதுக்கூட்டம் காணொளி காட்சி (VC)/ பிற ஒளி ஒலி சாதனங்கள் (OAVM) மூலமாக நடைபெறுகிறது ஆகவே, உறுப்பினர்கள் VC/OAVM மூலம் நடைபெற உள்ள அசாதாரண பொதுக்கூட்டத்தில் கலந்து கொள்ளலாம்.

12 மே 2020 தேதியிட்ட செக்யூரிடீஸ் அண்ட் எக்சேஞ் போர்டு ஆப் இந்தியா வழங்கிய சுற்றறிக்கை தளர்வுக்கு இணங்க, அசாதாரண பொதுக்கூட்ட அறிவிப்பு 5 மார்ச் 2021 அன்று அலுவல் நேரம் முடிவதற்குள் நேஷனல் செக்யூரிடீஸ் டெபாசிட்டரி லிமிடெட் (NSDL)/ சென்ட்ரல் டெபாசிட்டரி சர்வீசஸ் (இந்தியா) லிமிடெட் (CDSL)டிலிருந்து பெறப்பட்ட நன்மை பயக்கும் உரிமையாளர்கள் பட்டியல்/ உறுப்பினர் பதிவேட்டில் கண்டுள்ள பெயர்களில் உள்ள அனைத்து பங்குதாரர்களுக்கும் 6 மார்ச் 2021 அன்று மின்னணு வடிவத்தில் அனுப்பப்பட்டுள்ளது. அசாதாரண பொதுக்கூட்ட அறிவிப்பு கம்பெனியின் இணையதளம் www.abanoffshore.com, பிஎஸ்இ லிமிடெட் இணையதளம் www.bseindia.com மற்றும் நேஷனல் ஸ்டாக் எக்சேஞ் ஆப் இந்தியா லிமிடெட் இணையதளம் www.nseindia.comல் கிடைக்கும் என்பதை உறுப்பினர்கள் கவனத்தில் கொள்ள வேண்டும். VC/OAVM வசதி மூலம் மட்டுமே உறுப்பினர்கள் அசாதாரண பொதுக்கூட்டத்தில் கலந்து கொள்ளலாம். அசாதாரண பொதுக்கூட்டத்தில் சேருவதற்கான வழிமுறைகள் அறிவிப்பில் அளிக்கப்பட்டுள்ளன. VC/OAVM மூலம் கூட்டத்தில் கலந்து கொள்ளும் உறுப்பினர்கள், கம்பெனிகள் சட்டம் 2013, பிரிவு 103ன் கீழ் கோரத்தை கணக்கிடுவதற்கான நோக்கத்திற்காக கணக்கிடப்படுவார்கள்.

கம்பெனிகள் சட்டம் 2013, பிரிவு 108, கம்பெனிகள் (மேலாண்மை மற்றும் நிர்வாகம்) விதிகள் 2014ன்படி, உறுப்பினர்கள் மின்னணு முறையில் வாக்களிப்பதற்காக நேஷனல் செக்யூரிடீஸ் டெபாசிட்டரி லிமிடெட் (NSDL) மூலமாக வணிகத்தை பரிவர்த்தனை செய்வதற்கு மின்னணு வாக்குப்பதிவு (தொலைதூர மின்னணு வாக்குப்பதிவு) வசதியை கம்பெனி அளிக்கிறது. கூடுதலாக, மின்னணு முறையின் மூலம் வாக்களிப்பதற்கான வசதியும் கூட்டத்தின்போது கிடைக்கும் மற்றும் தொலைதூர மின்னணு வாக்குப்பதிவின் மூலம் ஏற்கனவே வாக்களிக்காமல் கூட்டத்தில் பங்கேற்கும் உறுப்பினர்கள் கூட்டத்தில் வாக்களிக்க உரிமை உள்ளது. தொலைதூர மின்னணு வாக்குப்பதிவு மற்றும் மின்னணு வாக்குப்பதிவிற்கான விரிவான நடைமுறைகள் அறிவிப்பில் வழங்கப்பட்டுள்ளது.

வாக்களிப்பதற்கு கட் ஆப் தேதியான 21 மார்ச் 2021 அன்று டெபாசிட்டரிகளால் பராமரிக்கப்படும் நன்மை பயக்கும் உரிமையாளர்கள் பட்டியல்/உறுப்பினர் பதிவேட்டில் கண்டுள்ள பெயர்களில் உள்ள உறுப்பினர்கள் அசாதாரண பொதுக்கூட்டத்தில் தொலைதூர மின்னணு வாக்குப்பதிவு/ மின்னணு வாக்குப்பதிவு மூலம் வாக்களிக்கும் வசதி உள்ளது. கட் ஆப் தேதியான 21 மார்ச் 2021க்கு முன்பாக ஆனால் அறிவிப்பு அனுப்பிய பிறகு கம்பெனியின் பங்குகளை பெற்று உறுப்பினரான நபர் evoting.nsdl.comக்கு ஒரு கோரிக்கை அனுப்பி லாகின் ஐடி மற்றும் பாஸ்வேர்டை பெற்றுக் கொள்ளலாம் அல்லது பதிவாளர் மற்றும் பங்கு பரிமாற்ற முகவரான கேமியோ கார்ப்பரேட் சர்வீசஸ் லிமிடெட், "சுப்ரமணியன் பில்டிங்'', எண். 1 கிளப் ஹவுஸ் ரோடு, சென்னை–600 002 Phone : +91 044 28460390 (5 lines); Fax :+91 044 28460129; Email : investor@cameoindia.comல் தொடர்பு கொள்ளலாம்.

தொலைதூர மின்னணு வாக்குப்பதிவு வியாழக்கிழமை, 25 மார்ச் 2021 அன்று(காலை 9.00 மணிக்கு) தொடங்கி ஞாயிற்றுக்கிழமை, 28 மார்ச் 2021 அன்று (மாலை 5.00 மணிக்கு) முடிவடைகிறது.

மேற்சொன்ன தேதி மற்றும் நேரத்திற்கு பின்னர் (ஞாயிற்றுக்கிழமை, 28 மார்ச் 2021 அன்று மாலை 5.00 மணி) மின்னணு முறையில் வாக்களிக்க முடியாது என்பதை உறுப்பினர்கள் கவனத்தில் கொள்ள வேண்டும். அதன்பின்னர் தொலைதூர மின்னணு வாக்குப்பதிவை NSDL நிறுத்திவிடும்.

அசாதாரண பொதுக்கூட்டத்தில் தொலைதூர மின்னணு வாக்குப்பதிவு/வாக்குப்பதிவிற்காக M/s. G. ராமச்சந்திரன் அண்ட் அசோசியேட்ஸ், பிராக்டிசிங் கம்பெனி செயலாளர், சென்னை அவர்கள் ஆராய்வாளராக நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

தொலைதூர மின்னணு வாக்குப்பதிவு மூலம் வாக்களித்த உறுப்பினர்கள் கூட்டத்தில் பங்கேற்கலாம் ஆனால் மீண்டும் வாக்களிக்க உரிமை கிடையாது.

மின்னஞ்சல் முகவரிகள்/சரியான வங்கி விவரங்களை பதிவு செய்யாத உறுப்பினர்கள் தங்கள் மின்னஞ்சல் முகவரிகள்/வங்கி விவரங்களை அந்தந்த டெபாசிட் பங்கேற்பாளர்களிடம் பதிவு செய்யுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள் மற்றும் காகித வடிவில் பங்குகளை வைத்திருக்கும் உறுப்பினர்கள் தங்கள் மின்னஞ்சல் முகவரிகள்/வங்கி விவரங்களை கம்பெனியின் பதிவாளர் மற்றும் பங்கு பரிமாற்ற முகவரான கேமியோ கார்ப்பரேட் சர்வீசஸ் லிமிடெட்டின் investor@cameoindia.comக்கு மின்னஞ்சல் அனுப்புமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

மின்னணு முறையில் வாக்களிப்பது தொடர்பாக ஏதேனும் சந்தேகம்/குறைகள் இருப்பின் அது குறித்து Ms. பல்லவி மத்ரே, மேலாளர், NSDL, 4வது மாடி, 'ஏ' விங், டிரேட் வேர்ல்ட், கமலா மில்ஸ் காம்பவுண்ட், சேனாபதி பாபட் மார்க், லோயர். பரேல், மும்பை 400 013. மின்னஞ்சல்: evoting@nsdl.co.in /pallavid@nsdl.co.in, தொலைபேசி: 91 22 24994545 /1800–222–990ல் தொடர்பு கொள்ளலாம்.

(குழுவின் ஆணைப்படி)
S.N. பாலாஜி
துணை பொது மேலாளர் (சட்டம்) மற்றும் செயலாளர்

இடம்: சென்னை
தேதி: 06.03.2021